**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 279 of 2025**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : பழனியம்மாள்** | **Father/Husband's Name : சின்னசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.10.2025.**

**Accused(A3 in Original C.C. 374/2010) absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தெற்கு தாதநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரி தங்கம்மாள் என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் நான் தான் கைரேகை வைத்தேன். 10ம் தேதி சுமார் 17 வருடங்களுக்கு முன்பு எனது காட்டில் வந்து தட்டை பயறு வெள்ளாமையை டிராக்டர் மூலம் அளித்தார்கள். எனது தோட்டத்தில் நானும் எனது மருமகள் பிரேமாவும் தான் இருந்தோம். தங்கமாளும், விஜயாவும் வந்து எனது முடியை பிடித்து முதுகில் அடித்தார்கள். என்னை முதலில் அடித்தார்கள். அதற்கு பிறகு எனது மருமகளை அடித்தார்கள். ஆஜர் எதிரிகள் டிராக்டரில் வந்து அடித்தார்கள். தங்வேல், மூர்த்தி ஆகியோர் ஆஜர் எதிரிகளுடன் டிராக்டரில் வந்து வெள்ளாமையை அழித்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் குமார் மற்றும் பரமன். பரமன் ஒன்றும் செய்யவில்லை. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. காவல் நிலையத்தில் இருந்து Memo தந்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பழனி அரசு மருத்துவமனையில் நான்கு நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் தெற்கு தாதநாயக்கன்பட்டியில் தோட்டத்தில் குடியிருந்து வருகிறேன். எத்தனை

வருடங்களாக நான் அங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் 40 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் காட்டு வேலை விவசாய வேலை செய்கிறேனா என்றால் ஆமாம். நான் புகார் மனுவில் எங்களுக்கும், எதிரிகள் தரப்புக்கும் வண்டி பாதை தொடர்பாக பிரச்சனை இருந்து வந்ததாகவும், அது சம்மந்தமாக உரிமையியல் வழக்கு நடந்து வருவதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உரிமையியல் வழக்கு எண் விபரத்தை புகாரிலும், போலிசார் விசாரணை வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் ஆமாம். உரிமையியல் வழக்கு எண் என்ன என்று தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கு எண் என்ன என்றால் தற்போது எனக்கு தெரியவில்லை. நான் அதிகமாக படிக்கவில்லை. புகார் மனுவில் சொத்தின் நான்குமால் விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம், நான்குமால் இருக்கிறது. வண்டிப்பாதை என்னுடையது தான் என்று சொல்வதற்கு பட்டா பத்திரம் இருக்கும் என்றால் ஆமாம், இருக்கிறது. அந்த வண்டி பாதைக்குரிய பட்டா பத்திரம், வருவாய் ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் ஆமாம். புகாரை நான் வாய்மொழியாக சொல்ல சொல்ல எழுதி கொண்டார்கள் என்றால் ஆமாம். நிலத்திற்கும், வண்டி பாதைக்கும் கம்பி வேலி எதுவும் போடப்பட்டதா என்றால் இல்லை, பாதை இருக்கிறது. உரிமையியல் வழக்கில் தடை உத்தரவு பெறப்பட்டதா என்றால் வாங்கவில்லை, நடக்க கூடாது என்று உள்ளது, நாங்களும் சொன்னோம். எத்தனை மணிக்கு வண்டிபாதைக்கு அருகில் போனேன் என்றால் மதியம் 12.00 மணி இருக்கும். எத்தனை மணிக்கு திரும்ப வீட்டிற்கு சென்றேன் என்றால் அப்போதே வீட்டிற்கு சென்றுவிட்டேன். எந்த வாகனத்தில் எதிரிகள் வந்ததாக சொல்லுகிறேன் என்றால் டிராக்டரில் வந்தார்கள். டிராக்டர் எண்ணை எழுதி கொடுக்கவில்லை என்றால் அப்போது கொடுத்திருப்பேன், தற்போது வயதாகிவிட்டது. சம்பவம் நடந்தவுடன் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் அப்போது கொடுக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்வது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 10.00-11.00 மணி இருக்கும்.

3. எனது காட்டில் என்ன சேதம் ஆகிவிட்டது என்றால் வயலை உழுதுவிட்டதால் தட்டச்செடி, கொட்டை மரம் ஆகியவை சேதமானது, வண்டிபாதை மட்டுமல்லாமல் வயலிலும் உழுதுவிட்டார்கள். சேதம் மதிப்பு எப்படி கணக்கிட்டேன்

என்றால் காட்டில் பயிர் செய்ததை வைத்து சொன்னேன். தட்டை பயிர் போட்டதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் சேதம் என்று சொன்னேன். சம்பவயிடத்திற்கு போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் அன்றைய தினம் போலிசாருக்கு தகவல் தெரிந்த பின்பு வந்தார்கள். வண்டிபாதை சம்மந்தமாக எத்தனை வருடம் பிரச்சனை இருக்கிறது என்றால் சம்பவத்திற்கு 5–6 மாதங்களுக்கு முன்பு இருக்கும். பாதை பிரச்சனைக்கு பின்பு தான் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். புகார் மனுவில் கணவர் வெளியூருக்கு சென்றுவிட்டார் என்று சொல்லியுள்ளதில் எந்த ஊர் என்று சொல்லவில்லை என்றால் சரிதான், அப்போது மகள் வீட்டிற்கு சென்றிருந்தார். போலிசார் தந்த மருத்துவ நமுனாவில் எழுதியிருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த அதிகாரி மருத்துவ நமுனா கொடுத்தார் என்றால் அப்போது கொடுத்தார், அவருடைய பெயர் எனக்கு தெரியாது. எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் சம்பவம் நடந்த அன்று மாலை 6.00 மணி இருக்கும். எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு வீட்டில் இருந்து கிளம்பினேன் என்றால் மாலை 4.00 மணி இருக்கும். காவல் நிலையத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 –15 கி.மீ. இருக்கும். தோட்டத்தில் இருந்து வரும்போது நெய்காரப்பட்டியில் மருத்துவமனை உள்ளது என்றால் ஆமாம். நெய்காரப்பட்டி அரசு மருத்துவமனைக்கு ஏன் செல்லவில்லை அப்போது அங்கு அரசு மருத்துவமனை இல்லை. காவல் நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் 1.30–2.00 மணி நேரம் இருந்தோம். யார் புகாரை எழுதினார் என்றால் எனது கணவர் வந்தார், என் கணவர் சொல்ல சொல்ல காவல் ஆய்வாளர் எழுதினார். கைரேகையில் தேதி, நேரம் எழுதவில்லை என்றால் நானே கைரேகை தான் வைத்தேன். எத்தனை பேப்பரில் கைரேகை வாங்கினார்கள் என்றால் இரண்டு மூன்று பேப்பர்கள் இருக்கும், நிறைய பேப்பரில் வாங்கினார்கள். மருத்துவமனையில் இருந்து எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தேன் என்றால் ஞாபகமில்லை. புகார் அளிக்கும்போது என்னுடன் யார் இருந்தார் என்றால் எனது கணவரும், நானும் தான் இருந்தோம். சாட்சியாக எனது மருமகனும், அவரது பங்காளியும் போட்டார்கள். சம்பவயிடத்தில் எதிரிகளுக்கு தோட்டம் இருந்ததா என்றால் அருகில் இருந்தது. எதிரிகள் தரப்பு எவ்வளவு வருடங்களாக அங்கு இருக்கிறார்கள் என்றால் 30 வருடங்கள் இருக்கும். தோட்டத்திற்கு எதிரிகள் அந்த வண்டிபாதையில் தான் சென்றார்கள் என்றால் இல்லை. எனது கணவர் மீது

எதிரிகள் தரப்பு வழக்கு தொடுத்திருந்தார்கள் என்றால் என்ன விபரம் என்று தெரியாது, புகார் கொடுத்திருந்தார்கள். ஏற்கனவே முன் விரோதம் இருந்ததால் என் கணவர் அதன் தொடர்ச்சியாக இந்த வழக்கு தொடுத்தார் என்றால் இல்லை, இந்த வழக்கு நான் தொடுத்தேன். எனது வக்கீல் சொல்லி கொடுத்து தான் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே பிரச்சனை இருந்ததால் அதை காரணம் கொண்டு பொய் வழக்கு தொடுத்தேன் என்றாலும் இல்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.10.06 17:53:54 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 279 of 2025**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : பிரேமா** | **Father/Husband's Name : தங்கராஜ்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.10.2025.**

**Accused(A3 in Original C.C. 374/2010) absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தெற்கு தாதநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் குமார் மற்றும் பரமன் ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரிகள் தங்கம்மாள், விஜயா, தங்கவேல், மூர்த்தி ஆகியோர்களை எனக்கு தெரியும். அ.சா.1 பழனியம்மாள் எனது மாமியார். 10.04.2008 ம் தேதி சுமார் பகல் 12.00 மணியளவில் நானும் எனது மாமியாரும் தோட்டத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகளும் தங்கம்மாள், விஜயா, தங்கவேல், மூர்த்தி ஆகியோரும் தட்டபயிறு காட்டுக்குள் அழிமானம் செய்ய வந்து காட்டை அளித்தார்கள். அதற்கு பிறகு எனது மாமியார் என்ன என்று கேட்ட போது எனது மாமியாரை அடித்து விட்டார்கள். நான் என் மாமியாருக்கு பின்னால் சென்றதால் தங்கம்மாளும், விஜயாவும் என்னை தள்ளிவிட்டார்கள். எனது மாமியாரை முடியை பிடித்து இழுத்து முதுகிலும், வயிற்றிலும் தங்கம்மாளும், விஜயாவும் அடித்தார்கள். மற்றவர்கள் எனது மாமியாரை எட்டி உதைத்தார்கள். மூர்த்தி , தங்கவேல் , பரமன் ஆகியோர் சண்டை நடந்து கொண்டிருந்தபோது டிராக்டர் மூலம் காட்டை அழித்தார்கள். ஏற்கனவே குமாரும், பாஸ்கரும் பாதை பிரச்சனை சம்மந்தமாக பாதை கேட்டு சண்டை போட்டார்கள். அதற்கு எனது மாமனார் சின்னசாமி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. பின்னர் எனது மாமனார் இல்லாத சமயத்தில் தோட்டத்தில் வந்து மேற்படி எதிரிகள் எனது மாமியாரை அடித்து, என்னையும் அடித்து கீழே தள்ளினார்கள். பின்னர் எனது மாமனாரும், மாமியாரும்

அடுத்த நாள் காலை தாலுகா காவல் நிலையம் சென்று புகார் அளித்தார்கள். பின்னர் பழனி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சைக்கு சேர்ந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வது படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் பாரதிபுரம், தெற்கு தாதநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனது மாமியார் சொல்லி தான் தெரியும் என்றால் ஆமாம், சண்டை நடந்தபோது நானும், எனது மாமியாருடன் இருந்தேன். சம்பவம் நடந்தபோது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 10.00–11.00 மணிக்கு மேல் இருக்கும். வழக்கு சம்பவயிடம் வண்டிபாதை என்றால் ஆமாம். வண்டிபாதை எங்களுக்கு தான் சொந்தம் எதுவும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, வண்டி பாதை எங்கள் இடத்திற்குள் தான் இருக்கிறது. சம்பவயிடத்தில் எத்தனை மணிக்கு புகைப்படம் எடுத்தார்கள் என்றால் அடுத்த நாள் வந்து எடுத்தார்கள். யார் புகைப்படம் எடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது தெரியாது. எனது மாமனார் மீது எதிரிகள் PCR வழக்கு தொடுத்து எனது மாமனார் 90 நாள் சிறையில் இருந்தார் என்றால் இல்லை, 15 நாட்கள் இருந்தார். புகார் கொடுப்பதற்கு காவல் நிலையத்திற்கு நான் சென்றேனா என்றால் நானும், எனது அத்தையும் சென்றோம். வேறு யாரும் வந்தார்களா என்றால் இல்லை. என்னிடம் காவல் நிலையத்தில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம். எத்தனை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் அது ஞாபகம் இல்லை. என்னை காவல் நிலையத்திற்கு வர சொல்லி எப்போது விசாரித்தார்கள் என்றால் என்னை எனது வீட்டில் வந்து தான் விசாரித்தார்கள். வண்டி பாதை பிரச்சனை எத்தனை வருடங்களாக இருந்தது என்றால் வண்டிபாதை இல்லை, எதிரிகள் நடந்து கொண்டிருந்தார்கள், நாங்கள் தோட்டம் இருப்பதால் நடந்து வர வேண்டாம் என்று சொன்னோம். வண்டிபாதைக்கும், தோட்டத்திற்கும் நடுவில் கம்பி வேலி எதுவும் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எத்தனை வருடங்களாக வண்டி பாதையில் சென்று கொண்டிருந்திருப்பார்கள் என்றால் நாங்கள் அந்த இடத்தை வாங்கிய பிறகு நடந்து கொண்டிருந்தார்கள். அதற்கு முன்பு நடந்தார்களா என்று எனக்கு தெரியாது.

வண்டி பாதையை ஒட்டி எத்தனை அடி என்ன வாய்க்கால் இருக்கிறது என்றால் இரவி மங்கலம் வாய்க்கால் உள்ளது.

3. அதிலிருந்து குளத்து வரை இருக்கும். வாய்க்காலை ஒட்டி வண்டி பாதை கரை உள்ளது என்றால் இல்லை, அது இடத்திற்குள் தான் உள்ளது. வாய்க்காலின் கரை எவ்வளவு அடி அகலம் இருக்கும் என்றால் நடந்து போகும் அளவில் உள்ளது. எத்தனை அடி அகலம் என்றால் ஒரு பைக் செல்லலாம். அதையொட்டி பாதை எத்தனை அடி இருக்கும் என்றால் வண்டி போகும் அளவில் இருக்கும். சம்பவம் நடந்தபோது வாகனம் வந்ததாக சொல்லியதில் என்ன வாகனம் என்றால் டெம்போ வாகனம். அந்த வாகனத்தின் பதிவெணை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், பிரச்சனையில் கவனிக்கவில்லை. அந்த வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்று வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எத்தணை மணிக்கு சென்றோம் என்றால் சம்பவம் நடந்த அன்று சாயங்காலம் சென்றோம். புகார் மனுவில் என்னை சாட்சி கையொப்பம் போடச் சொன்னார்களா என்றால் ஆமாம். எனது மாமியார் புகாரில் உரிமையியல் வழக்கு இருக்கிறது என்று சொல்லியுள்ளார் என்றாலும் அப்படி உரிமையியல் வழக்கு இருந்ததா என்றாலும் ஆமாம். அந்த உரிமையியல் வழக்கு நடக்கும்போது நான் அங்கு இருந்தேனா என்றால் உரிமையியல் வழக்கு நடக்கும்போது பிரசவத்திற்காக என் அம்மா வீட்டில் இருந்தேன். உரிமையியல் வழக்கு விபரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வண்டி பாதையில் எதிரிகள் தவிர வேறு யாரெல்லாம் சென்று கொண்டிருந்தார்கள் என்றால் வேறு யாரும் செல்லவில்லை. எத்தனை வருடங்களாக எதிரிகள் பயன்படுத்தினார்கள் என்றால் நாங்கள் 2006 ல் வாங்கிய பிறகு பயன்படுத்தினார்கள் 2008 ல் வழக்கு போட்டோம். உரிமையியல் வழக்கில் தடை உத்தரவு எதுவும் வாங்கி உள்ளார்களா என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அது வண்டிபாதை என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது மாமியார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.10.06 17:54:21 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.